இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 26-02-2025

# ஜகதீப் தன்கரே எச்சரிக்கிறார்

இந்தித் திணிப்பை அரசியல் காரணங்களுக்காக நாம் எதிர்ப்பதாகச் சிலர் உளறிக் கொண்டிருந்தபோது அவர்களுக்குப் பதில் சொல்லும் வகையில் துணைக் குடியரசுத் தலைவர் ஜகதீப் தன்கரே பேசி இருக்கிறார். தமிழ்நாட்டு மக்களுக்கு மொழியின் பெருமையையும் அருமையையும் சொல்லி எச்சரிக்கிறார் தன்கர்.

டெல்லியில் 98 ஆவது அகில பாரதிய மராத்தி சாகித்திய மாநாடு நடைபெற்றுள்ளது. இதில் கலந்து கொண்டு உரையாற்றி இருக்கிறார் இந்திய நாட்டின் துணைக் குடியரசுத் தலைவர் ஜகதீப் தன்கர் அவர்கள். மாநிலங்களவை அவைத் தலைவர் அவர். அவரைப் பற்றி அதிகம் அறிமுகம் செய்யத் தேவையில்லை. அந்த மாநாட்டில் ஜகதீப் தன்கர் ஆற்றிய உரையின் சில வரிகளை வாசியுங்கள்...

**“ஒரு நாடு, அதன் கலாச்சார வளம் மற்றும் கலாச்சாரப் பண்பாடுகளால் வரையறுக்கப்படுகிறது. நமது முன்னோர்கள் நமது கலாச்சாரத்தையும் மொழிகளையும் வளர்த்தனர். அதே வழியில் வளர்ப்பது நமது கடமை. இலக்கியத்தைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் கைகோத்துச் செயல்படுவதன் மூலம் மட்டுமே இதைச் செழிக்கச் செய்ய முடியும். ஒரு வட்டாரத்தை (பிராந்தியத்தை, மாநிலத்தை) வீழ்த்த வேண்டுமானால் அதைக் கைப்பற்ற வேண்டியதில்லை. அந்த வட்டாரத்தின் மொழியை அழிப்பதுதான் சிறந்த வழி. பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் நுழைந்த ஆக்கிரமிப்பாளர்கள் அதே வழியைத்தான் கடைப்பிடித்தனர். அவர்கள் கொடூரமானவர்களாகவும் நமது மொழி, கலாச்சாரம், வழிபாட்டுத் தலங்கள் ஆகியவற்றை வெறுப்பவர்களாகவும் அடக்குமுறையாளர்களாகவும் இருந்தனர். பழிவாங்கும் தன்மையுடனும் கொடுங்கோன்மையுடனும் திகழ்ந்தனர். நமது மொழிகள் வளர முடியாத அளவுக்குத் தடுத்தனர். நமது மொழி தழைக்காவிட்டால் நமது வரலாறு தழைக்காது”** – என்று பேசி இருக்கிறார் இந்திய நாட்டின் துணைக் குடியரசுத் தலைவர் ஜகதீப் தன்கர்.

உண்மையில் நாம் அவருக்கு நன்றி சொல்லியாக வேண்டும். உண்மையைப் பேசியதற்காக! அதுவும், உரக்கப் பேசியதற்காக! அதுவும், இந்தக் காலக்கட்டத்தில் பேசியதற்காக!

**தமிழினத்தை வீழ்த்தவே இந்தி திணிக்கப்படுகிறது, தமிழர் பண்பாட்டை அழிக்கவே இந்தி திணிக்கப்படுகிறது, தமிழை அழிக்கவே இந்தி திணிக்கப்படுகிறது என்று நாம் சொன்னால், அதனை அரசியல் என்று ஒதுக்கித் தள்ளுகிறார்கள் பா.ஜ.க. கைத்தடிகள். ‘ஒரு மாநிலத்தை வீழ்த்த வேண்டுமானால் அதன் மொழியை அழிப்பது தான் சிறந்த வழி’ என்பதையும் சொல்லி, இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் அந்த வழியைத்தான் கடைப்பிடித்தார்கள் என்பதையும் சொல்லி தமிழ்ச் சமுதாயத்துக்கு எச்சரிக்கை மணி அடித்திருக்கிறார் ஜகதீப் தன்கர். இந்தித் திணிப்பை ஏற்றுக் கொள்ளாதீர்கள், இறுதி வரை போராடுங்கள் என்று ‘மறைமுகமாக’த் தூண்டி இருக்கிறார் தன்கர்.**

தமிழ் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் இதுபோன்ற மொழிப் படையெடுப்புகளில் சிக்கியே வருகிறது. வடக்கே இருந்து வந்த ஆரியர்கள் தமிழ்நாட்டின் மீது நடத்திய பண்பாட்டுப் படையெடுப்பாக தங்களது வைதீக மதத்தை, வருணக் கோட்பாட்டை இங்கு திணித்தார்கள். ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்ற தமிழர் பண்பாட்டைச் சிதைத்தார்கள். இறைப்பெயர்களை மாற்றினார்கள். இறைவழிபாட்டு முறையை மாற்றினார்கள். தமிழ் இருந்த இடத்தில் சமஸ்கிருதத்தைப் புகுத்தினார்கள். வேத மறைகளை, தமிழ் மறைகளாக மாற்றினார்கள். சமஸ்கிருதம்தான் தேவபாஷை, தமிழ் நீஷ பாஷை ஆனது. திருக்குறளும் சங்க இலக்கியங்களும் இருந்த இடத்தில் வேத இலக்கியங்களைக் கொண்டு வந்து உட்கார வைத்தார்கள். சங்க இலக்கிய ஓலைச் சுவடிகள் ஆண்டுதோறும் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது.

பல்லவர் ஆட்சியில் வடமொழி ஆதிக்கமே மேலோங்கியது. மகேந்திரவர்மப் பல்லவ மன்னர், ‘மத்தவிலாசப் பிரகசனம்’ என்ற தலைப்பில் வடமொழியில் தான் நாடக நூலை எழுதினார். விஜயநகரப் பேரரசு காலத்தில் தெலுங்கு கோலோச்சியது. இசைத்துறையில் தெலுங்கு முழுமையாக நுழைந்த காலம் இது. இன்று வரை தமிழ்நாட்டு இசை மேடைகளை ஆட்சி செய்கிறது. மராத்திய மன்னர்கள் ஆளுகையில் அந்த மொழியும் உள்ளே வந்து சில பகுதிகளில் பரவியது. மொகலாயர்கள், நவாப்புகள் ஆட்சியில் நிர்வாகத் துறையில் பாரசீக, அரபியச் சொற்கள் நுழைந்தன. ஜில்லா, தாலுக்கா, ஜாமீன், வாய்தா, வக்காலத்து ஆகியவை அப்போது நுழைந்தவைதான். அடுத்து வந்த பிரிட்டிஷ் ஆட்சியானது ஆங்கிலத்தை முழுமையாகக் கொண்டு வந்து புகுத்தியது.

இவர்கள் யாருடைய ஆட்சியாக இருந்தாலும் ‘சமஸ்கிருத’ ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்ட ஆட்சியாக நடத்தினார்கள். ‘உள்ளூர் விவகாரங்களில் தலையிடுவது இல்லை’ என்ற கொள்கையானது சமஸ்கிருத – வேத மரபுக்கு வசதியாகப் போனது. மாற்று மொழியினர் – மாற்று மதத்தவர் – மாற்றுப் பண்பாட்டவர் படையெடுப்பானது தொடர்ந்து நடந்து வந்துள்ளது. அதனால்தான் தமிழ் புறக்கணிக்கப்பட்டது.

சிந்துச் சமவெளி நாகரிக காலத்தில் (கி.மு.3000 – 1500) இந்தியா முழுவதும் பரவியிருந்தது தமிழ். கி.மு. 1500 ஆம் ஆண்டில் இந்தோ – ஆரிய மொழி பேசுவோர் இந்திய நாட்டுக்குள் நுழைந்த பின்னால் தமிழின் பரப்பானது தெற்குப் பகுதியில் மிகமிகச் சுருங்கியதை உணர வேண்டும். வடபகுதியில் இருந்த மொழிகள் அனைத்தையும் இந்தோ – ஆரிய மொழி உள்வாங்கிவிட்டது. அதனால் உள்வாங்க முடியாதது தமிழ் மட்டும் தான். ஏனென்றால் சமஸ்கிருத மரபு வேறு. தமிழ் மரபு வேறு. சமஸ்கிருதம் இல்லாமல் தனித்தியங்கும் தன்மை தமிழுக்கு மட்டுமே உண்டு. இதனை முதலில் மெய்ப்பித்து எழுதியவர் கால்டுவெல். அதனால்தான் கால்டுவெல் மீது இனப்பகையோடு இழிசொற்களைப் பாய்ச்சுகிறார்கள்.

‘சமஸ்கிருதத்தில் இருந்து பிறந்த இந்துஸ்தானியைக் கற்றுக் கொள்ளுங்கள்’ என்றார் காந்தி. ‘இந்தி கற்றுக் கொடுத்தால் 15 ஆண்டுகளில் இந்தியா, இந்தி நாடாக மாறிவிடும்’ என்று எடுத்துக் கொடுத்தார் சத்தியமூர்த்தி. ‘இந்தியைக் கற்றுக் கொண்டால் சமஸ்கிருதம் படிப்பது எளிது’ என்று சட்டமன்றத்தில் சொன்னார் அன்றைய முதலமைச்சர் இராஜாஜி. ‘இந்தி வேலைக்காரியாக இருக்கட்டும்’ என்றார் இராஜாஜி. அதனால்தான் பெரியார் இந்த மொழித் திணிப்பை எதிர்த்தார். ‘இந்தியால் தமிழ் அழியாது, தமிழ்ப் பண்பாடு அழிந்து போகும்’ என்றார் பெரியார். **“வயிற்றுப் பிழைப்புக்காக தென்னாட்டில் புகுந்த ஆரியர்கள் மதத்தின் பேரால், கடவுள் பேரால் தமிழ் மக்களை அடிமைப்படுத்தி விட்டது போல இன்று வேலைக்காரியாக வரும் ஹிந்தி, நாளை தமிழ் நாட்டரசி ஆவது நிச்சயம்”** என்று தமிழர்களைத் தட்டி எழுப்பியவர் பெரியார்.

●●

## சேலம் மேற்கு மாவட்டத்தில் – மாதம் முழுவதும்

# முதல்வர் பிறந்த நாளை நலஉதவிகள் வழங்கி கொண்டாடுவோம்!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு!

சேலம், பிப். 26 -

சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம், 23.02.2025 அன்று காலை 11.00 மணி அளவில், மாவட்டக் கழக அலுவலகம், “கலைஞர் மாளிகை”, “வீரபாண்டியார் அரங்கில்”, மாவட்டக் கழக அவைத்தலைவர் பி.தங்கமுத்து தலைமையில் சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், சேலம் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.எம்.செல்வகணபதி சிறப்புரையுடன் நடைபெற்ற அக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் சேலம் மேற்கு மாவட்டக் கழக செயற்குழு உறுப்பினர்களால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.



கழகத் தலைவர் தளபதி அவர்கள் தனது 14வது வயதில் கோபாலபுரத்தில் இளைஞர் தி.மு.கவை தொடங்கி தனது அரசியல் வாழ்வில் அடியெடுத்து வைத்தார்கள். வட்டக் கழக பிரதிநிதி, மாவட்டக் கழக பிரதிநிதி, பொதுக்குழு உறுப்பினர், செயற்குழு உறுப்பினர், மாநில இளைஞர் அணிச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர், சென்னை பெருநகர மேயர், கழக துணைப் பொதுச் செயலாளர், கழகப் பொருளாளர், செயல் தலைவர் தனது கடின உழைப்பால் உயர்ந்த உத்தம தலைவர் தளபதியார் அவர்கள், கழகம் தொடங்கி 75 ஆண்டுகள் நிறைவடைந்த இந்த மாபெரும் இயக்கத்தின் தலைவராக தாய்மொழி தமிழையும், தமிழ்நாட்டையும் உலகறிய செய்த பெருமைக்குச் சொந்தக்காரர். ஈரோட்டு சிங்கம் தந்தை பெரியாரின் சுயமரியாதையும், தென்னாட்டின் பெர்னாட்சா பேரறிஞர் அண்ணாவின் கனவையும், தனது ஆற்றலால், போராட்ட குணத்தால் கழகத்தை கட்டிக்காத்த உலகெங்கும் இருக்கின்ற தமிழர் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒப்பற்ற தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உறுதியையும் ஒருங்கே பெற்ற ஒப்பற்ற தலைவர் நமது கழகத் தலைவர் தளபதியார் ஆவார்கள். மக்களால் நேரடியாக சென்னை பெருநகர மேயராகப் பொறுப்பேற்று சிங்கார சென்னையாக மாற்றியதுடன், வியக்கத்தக்க மேம்பாலங்களை கட்டி சென்னையில் போக்குவரத்து நெரிச்சலை சீர்படுத்தினார்கள். 29.05.2009 தமிழ்நாடு அரசின் துணை முதல்வராக பொறுப்பேற்க ஜப்பான் நாட்டின் உதவியுடன் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தை செயல்படுத்தியவர் நமது கழகத் தலைவர் அவர்கள். தமிழகம் முழுவதும் சுற்று பயணம் செய்து மகளிர் சுய உதவி குழுக்கள் தாராளமாக நிதி வழங்கி மகளிர் சுய உதவிக்குழுவை மேன்மைபடுத்தினார்கள். சுயமரியாதை, சமூகநிதி, சமத்துவம் சகோதரத்துவம் மாநில சுயாட்சி, இளைஞர் நலன் பெண்ணுரிமை, தமிழின மொழி பாதுகாப்பு ஆகிய அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய வளர்ச்சியே திராவிட மாடல் ஆட்சி என இந்திய ஒன்றியத்தில் உள்ள மாநிலங்களில் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக உருவாக்கி வருகிறார்கள். நமது கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் தமிழக முதல்வராக பொறுப்பேற்ற கடந்த 4 ஆண்டுகளாக தமிழக முன்னேற்றத்திற்காக பல செயற்கரியத் திட்டங்களை அறிவித்து, செயல்படுத்தி வருகிறார்கள்.

தமிழக பெண்களின் முன்னேற்றித்திற்காக எண்ணற்ற திட்டங்கள் குறிப்பாக மகளிர் சுய உதவி கடன் தள்ளுபடி, சுய உதவி குழுக்களுக்கு தாராளமாக நிதி வழங்குவது, சம்பளத்துடன் கூடிய மகளிருக்கு 12 மாத பேறுகால விடுப்பு, அரசு பணிகளில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு, மகளிருக்காக உரிமைத் தொகை திட்டம், நான் முதல்வர் திட்டம், மேலும் மகளிர் விடியல் பயண பேருந்து திட்டம், ஆண்களுக்கான தமிழ்ப்புதல்வன் திட்டம், பல புதிய தனியார் தொழிற்கூடங்களை கட்டி உருவாக்கி ஆடவர், மகளிர் ஆகியோருக்கு வேலை வாய்ப்பை உருவாக்கியது. பள்ளி குழந்தைகளுக்கான காலை உணவுத் திட்டம், மக்களை தேடி மருத்துவம் போன்ற எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்கள் அடுத்த தலைமுறையின் வளர்ச்சிக்கான முன்னேற்ற திட்டங்களாகும். தனது உழைப்பின் தியாகத்தால் அனைவரையும் அரவணைக்கின்ற பண்பும், கண்ணியத்தால் உயர்ந்து நிற்கின்ற நமது கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாளான மார்ச் 01 இன உணர்வு, தமிழ் மொழி உணர்வுள்ள சான்றோர் பெருமக்களின் மனங்களில் மகிழ்ச்சி பொங்கிடும் திருநாள். அத்தகைய சிறப்புக்குரிய கழகத் தலைவர் அவர்களின் 72வது அகவையில் அடியெடுத்து வைக்கும் அந்நாளில் சேலம் மேற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் எடப்பாடி, மேட்டூர், சங்ககிரி தொகுதியில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் 01.03.2025 சனிக்கிழமை அன்று பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்குதல், நகர, ஒன்றிய பேரூர், சிற்றூர், ஊர் கிளைகள் உட்பட அனைத்து பகுதிகளிலும் கழகத் தோழர்கள் கழக இருவண்ணக் கொடியேற்றி, இனிப்புகள் வழங்குவதுடன், மருத்துவ முகாம்கள், இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் விளையாட்டுப் போட்டிகள், மரக்கன்றுகள் நடுதல், இரத்த தான முகாம்களை ஏற்பாடு செய்தல், ஏழை எளியோர் பயன் பெறும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகளை அந்த மாதம் முழுவதும் சிறப்பாக ஏற்பாடு செய்து கொண்டாடுவதென இக்கூட்டம் ஏகமனதாக தீர்மானிக்கிறது.

### ஒன்றிய அரசுக்கு கண்டனம்!

2025 - 2026 ஆம் ஆண்டிற்கான ஒன்றிய அரசின் நிதி நிலை அறிக்கையில் மத்தியில் ஆளும் பா.ஜ.க. அரசு தனது கட்சி ஆட்சி செய்யும் மாநிலங்களும் அதன் கூட்டணிக் கட்சி ஆட்சி செய்யும் மாநிலங்களுக்கும் நிதியை வாரி வழங்கியதுடன் தமிழ்நாட்டின் பெயரை கூட உச்சரிக்காமல், தமிழகத்துக்கு எந்த நிதியையும் வழங்காத, குறிப்பாக கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையிலும் இலட்சக்கணக்கான தமிழ்நாட்டு மாணவர்கள் ஆசிரியர்கள் நலன் கருதியும், தமிழ்நாட்டிற்கு கல்வித் திட்டத்தின் கீழ் வரவேண்டிய ரூ.2152 கோடி நிதியினை வழங்க மறுக்கும் ஒன்றிய அரசை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

மேலும் “தேசிய கல்விக் கொள்கை 2020ஐ முழுமையாக அமல்படுத்தி, மும்மொழி கொள்கையை ஏற்கும் வரை, தமிழ்நாட்டின் கல்வித் திட்டங்களுக்கு நிதி விடுவிக்கப்பட மாட்டாது” என்று ஒன்றிய கல்வித்துறை அமைச்சர் சமீபத்தில் தெரிவித்திருப்பதை சேலம் மேற்கு மாவட்ட செயற்குழுக் கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

### சட்டமன்ற தேர்தல் பணி!

கழகத் தலைவர் தளபதியார் அவர்களும் மாநில இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் விளையாட்டுத்துறை மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களும் தமிழுக்காகவும், தமிழக மக்களுக்காகவும் பல செயற்கறிய திட்டங்களை நிறைவேற்றி செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக தமிழ்நாட்டின் ஒவ்வொரு மகளிருக்கும் சகோதரனாக, தந்தையாக இருந்து வழங்கும் மகளிர் உரிமைத்திட்டம், மகளிர் விடியல் பேருந்து பயணத்திட்டம் பள்ளி குழந்தைகளுக்கான காலை உணவுத்திட்டம், இல்லம் தேடி கல்வித்திட்டம், உயர் கல்வி படிக்கும் மாணவர்களுக்கு புதுமைப் பெண் திட்டம், மாணவர்களுக்கு தமிழ்ப்புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம், மக்கள் தேடி மருத்துவம், மகளிருக்கு சுய உதவிக்குழுக்களுக்கு தாராள நிதி வழங்கும் திட்டம் போன்ற எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்கள் தலைமுறைதாண்டிய வளர்ச்சிக்கான அடித்தளமாகும். உழைப்பால், தியாகத்தால் அனைவரையும் அரவணைக்கின்ற பண்பால், கண்ணியத்தால் உயர்ந்து மக்கள் நலம் சார்ந்த திட்டங்களை நிறைவேற்று இந்திய துணைக் கண்டத்தில் தமிழகத்தை முதலிடத்திற்கு கொண்டு வர பாடுபட்டு கொண்டிருக்கின்ற கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் உழைப்பை, மாண்பமையும் போற்றுகின்ற வகையிலும் மாநில இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் சின்னவர் அவர்களின் உழைப்பை போற்றுகின்ற வகையிலும் சேலம் மேற்கு மாவட்ட கழகத் தோழர்கள் அனைவரும் கடுமையாக பாடுபட்டு வருகின்ற 2026 சட்டமன்ற பொதுத் தேர்தலில் 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெற சேலம் மேற்கு மாவட்டத்தில் உள்ள 3 சட்டமன்ற தொகுதியிலும் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற உழைக்க உறுதியேற்போம் என தீர்மானிக்கப்படுகிறது.

இக்கூட்டத்தில் எடப்பாடி தொகுதி பார்வையாளர் நா.முருகவேல், மாவட்ட துணைச் செயலாளர்கள் சம்பத்குமார், சுந்தரம், எலிச பெத்ராணி, மாவட்ட பொருளாளர் பொன்னுசாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் காமராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் முருகேசன், ராமநாதன், பூவாகவுண்டர், பொதுக்குழு உறுப்பினர்கள் அன்பழகன், சௌந்தரராஜன், ரவிக்குமரன், நகர கழக செயலாளர்கள் பாஷா, காசிவிஷ்வநாதன், குணசேகரன், செல்வம், கே.எம்.முருகன், ஒன்றியச் செயலாளர் பரமசிவம், பாலகிருஷ்ணன், நல்லதம்பி, பச்சமுத்து, ராஜேஸ், சீனிவாச பெருமாள், மிதுன் சக்ரவர்த்தி, அர்த்தநாரீஸ்வரன், பேரூர்க் கழகச் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## இந்தித் திணிப்பு: ஒன்றிய அரசைக் கண்டித்து கண்டனக் கூட்டங்கள்!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

## கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, பிப்.26 -

கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில நிர்வாகிகள் கூட்டம் நேற்று முன்தினம் (24.02.2025) காலை 11.00 மணியளவில் அண்ணா அறிவாலயத்தில் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் செயலாளர்கள் திருவாரூர் அர. திருவிடம், இறையன்பன் குத்தூஸ் மற்றும் துணைச் செயலாளர்கள் திருச்சி எழில்மாறன், செல்வேந்திரன், கெம்மங்குப்பம் சிகோபி, ஷாகிர் உசேன், எம்.எஸ்.ஹரிபாபு ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

நமது ஒப்பற்ற தலைவர், தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்தநாளில் திராவிடச் சமுதாயம் காட்டும் நன்றிகளின் அடையாளமாக, கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் சார்பில் மாவட்ட, ஒன்றிய, நகர நிர்வாகிகள் ஊர் தோறும் கொடியேற்றியும், கழக சாதனைகளை துண்டுப் பிரசுரங்களாக இல்லந்தோறும் வழங்கியும், தெருமுனைக் கூட்டங்கள் நடத்தியும் கொண்டாடுவதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

ஒரு இனத்தை அழிக்க வேண்டுமென்றால் அந்த இனத்தின் மொழியையும், கலாச்சாரத்தையும் அழிக்க வேண்டும் என்று குடியரசுத் துணைத் தலைவர் ஜகதீப் தன்கர் வெளிப்படையாகவே அறிவித்து அதன் தொடர்ச்சியாக, தமிழைச் சிதைக்கும் புதிய கல்விக்கொள்கையை அறிவித்து மாநிலத்தின் கல்விக்கான நிதியினை வழங்காமல் வஞ்சிக்கும் ஒன்றிய அரசின் தடித் தனத்தினைக் கண்டித்து மார்ச் மாதம் முழுதும் கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் சார்பில் மாவட்டந்தோறும் கண்டனப் பொதுக்கூட்டங்கள் நடத்துவதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் மாவட்டக் கழக அவைத்தலைவர் பி.தங்கமுத்து தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் டி.எம்.செல்வகணபதி எம்.பி. சிறப்புரையாற்றினார். இதில் எடப்பாடி தொகுதி பார்வையாளர் நா.முருகவேல், மாவட்ட துணைச் செயலாளர்கள் சம்பத்குமார், சுந்தரம், எலிசபெத்ராணி, மாவட்டப் பொருளாளர் பொன்னுசாமி மற்றும் பேரூர்க் கழகச் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.